# கல்விப் புரட்சியில் "ஆயிஷா"

**ஏ. மாலதி**
*முதுகலைத் தமிழாசிரியர்*
*(முனைவர் பட்ட ஆய்வாளர்)*
*இராணி மேரி கல்லூரி, சென்னை*

**ஜெயகோபால் கரோடியா**
*அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி*
*விருகம்பாக்கம், சென்னை*

மனிதனின் சுயஆற்றலையும், புதிய சிந்தனைகளையும் மனப்பான்மையும் எது தூண்டுகிறதோ அதுவே மிகச்சிறந்த கல்வி. வாழ்க்கையைப் புரிந்து கொள்வதற்கும், மிகச்சிறந்த வாழ்க்கையை வாழ்வதற்கும், கற்றுக் கொள்ளும் இடம் கண்டிப்பாக இயற்கைச் சூழலால் உருவாக்கப்பட்ட இச்சமூகமே ஆகும். நிச்சயமாகப் புத்தகக் கல்வியன்று. கல்வி குறித்த மாற்றுச்சிந்தனை முன்வைத்து எழுதப்பட்ட நூலே இரா. நடராசன் அவர்களின் ‘‘ஆயிஷா”.

**கல்வியின் குறிக்கோள்**

குழந்தைகளின் அறியாமை இருளை நீக்கி இயற்கையறிவைத் துாண்டி புதிய சிந்தனைகளை வளர்த்தெடுப்பதே கல்வியின் குறிக்கோள். ஏற்கனவே பலரால் முன்மொழியப்பட்ட கருத்துக்களை மனனம் செய்து, மீண்டும் அதையே வெளிப்படுத்தும் மனித ரோபோக்களை நாம் இச்சமூகத்திற்கு உருவாக்க வேண்டிய அவசியமில்லை. அவசரமுமில்லை. கல்வியைப் பற்றி மேனாள் துணைவேந்தர். வே.வசந்திதேவி அவர்கள் வெளிப்படுத்தும் போது, ‘‘குழந்தைகளுக்குச் சிந்திக்கக் கற்றுத் தருவதும் அவர்களிடம் பகுத்தறியும் திறமைகளையும் ஒன்றை உண்மையா, பொய்யா, சரியா? தவறா? என ஆராயக்கூடிய திறமைகளையும் வளர்ப்பது தான் கல்வி. அதுவே அறிவியல். கிளிப்பிள்ளைகளாகப் பாடங்களை மனப்பாடம் செய்து கொட்டுவதல்ல. அறிவியல் பாடம் அறிவியல் கண்ணோட்டத்தை உருவாக்க வேண்டும். இயற்கையாகவே மனிதனிடத்தில் உள்ள பகுத்தறிவுதான் அது பள்ளிக்குச் சென்று கல்வி கற்காதவர்களிடமும் இயற்கையாகவே அத்தகைய பகுத்தறிவு உள்ளது. ஆனால் கல்வி என்னும் பெயரால் அது மழுங்கடிக்கப்படுகிறது. எனவே புத்தகக்கல்வியென்பது மாணவர்களின் சுயதிறன்களை மழுங்கடிக்கின்றது’’ என்பது வெளிப்படை இதை எழுத்தாளர் இரா. நடராசன் தன்னுடைய ‘‘ஆயிஷா” என்று குறுநாவல் படைப்பில் தெள்ளத்தெளிவாக நடைமுறையில் நிகழ்ந்த ஓர் ஆசிரியரின் மனசாட்சியாக இக்கதையைப் பதிவு செய்கிறார்.

**சமூக அவலத்தில் ஆசிரியர்களின் பங்கு**

சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதில் ஆசிரியர்கள் சிறப்பிடம் பெறுகின்றனர். இளைய தலைமுறையினர் பெறும்பாலும் நம்பிக்கையொளி கண்ட ஆசிரியர்களின் நல்வார்த்தைகளையே வேதமெனக் கருதுகின்றனர். இந்நிலையில் சிலர் கல்விப் புரிதலற்ற, ஆசிரியர்கள், புத்தகக் கல்வியே உயர்ந்ததென்றும் அதை படித்தாலே வாழ்க்கையில் பொருளாதாரம் பெற்று நன்மை பெறலாம் என்று மாணவர்களைத் தவறான வழியில் ஈடுபடுத்துகின்றனர்.

தனக்கு தெரிந்ததையெல்லாம் மாணவர்களிடம் கொட்டிவிடவேண்டுமென்பதே உலக ஞானத்தையெல்லாம் அந்த சின்னஞ்சிறு மூளையில் ஏற்றிடவேண்டுமென்பது அல்ல கல்வி. உலக அறிவை எப்படி பெறவேண்டும் என்ற அவனிடமுள்ள தன்னம்பிக்கை என்ற சுய ஆற்றலைத் துாண்டி அதன் மூலம் கற்க வைப்பதே கல்வி. இந்த புரிதலைத்தான் மாணவர்கள் சமூகம் எதிர்பார்க்கிறது. ஆசிரியர்கள் கருத்துக்களை ஒப்பிப்பவராக இருக்கக்கூடாது. வாழ்ந்து காட்டுபவராக இருக்க வேண்டும். குழந்தைகளை அடைத்து வைக்கும் இடம் என்பதே பள்ளிக்கூடம் என்பதன்

பொருளாகிவிட்டது. யார் இந்தப் பணியில் ஈடுபடுகிறார்களோ அவர்கள் பள்ளிக்கூடமெனும் சிறையின் காவலர்களாக ஆகிவிடுகிறார்கள். நான் இப்போது என் மாணவர்களுக்கு கற்பித்துக் கொண்டிருக்கிறேன் எனும் தொழில் மனப்பான்மையிலிருந்து ஆசிரியர் விடுபட வேணடும். ஒரு இயல்பான ஒரு முனைப்பாங்குடைய ஆசிரியராக இல்லாவிடில் மாணவர்கள் இயல்பான முறையில் கற்க முடியாது என்று வினோபா கூறுவதிலிருந்து அறியலாம். வாழ்க்கையோடு எவ்விதத் தொடர்பும் இல்லாத கல்விமுறையை மாணவர்கள் கற்கவேண்டும் என்ற நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது. இது எவ்வளவு பெரிய சுமை.

இரா.நடராசன், தன்னுடைய "ஆயிஷா" படைப்பில் ஒரு விஞ்ஞான ஆசிரியர். வகுப்பறையில் எவ்விதம் இயந்திரம் போல, பத்தாண்டுகளுக்கும் மேலாக ஒரே பாடத்தை போதிக்கின்றார் என்பதும், அதனால் அவர் கற்பித்தலில் எவ்வளவு மனச்சோர்வு பெற்று, புதிதாகக் கற்கும் ஆர்வத்தையே இழந்தவராக இருக்கிறார் என்றும் தற்கால சராசரி ஆசிரியர்களின் மனநிலையை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறார்.

உண்மையான ஆசிரியர் கற்பிப்பதில்லை. இருப்பினும் அவருடன் இருப்பதாலேயே ஒருவர் தனக்குத்தானே கற்றுக்கொள்ள இயலும். சூரியன் அதன் ஒளியை தனித்தனியே வழங்குவதில்லை. அதன் ஒளிமூலம் வியாபிக்கிறது. அதிலிருந்து அனைவரும் மிகவும் இயல்பான எளிய வழியில் அதன் ஒளியைப் பெறுகின்றனர்.

குழந்தைகளை, குழந்தைகளாகவே எண்ணாமல், அவரவர் அறிவுத்திறனுக்கேற்ப அவர்களை வழிநடத்த வேண்டும். அறிவாற்றலுக்கும், வயதுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. "ஆயிஷா"-புதினத்தில் வரும் அறிவியல் ஆசிரியரும், தன் வகுப்பில் இயந்திரத்தனமாக இயங்கிய ஆசிரியர், மாணவர்கள் உருவத்தைப் பார்த்து அறிவை எடைபோடுபவர். உருவத்தில் கறுத்தும், பற்கள் தூக்கியும், தோற்றத்தில் சுமாராக இருக்கும் "ஆயிஷா" தான் அவரின் ஆணவத்தை உடைத்தெறிந்த ஆளுமை உளி.

அறிவியல் ஆசிரியருக்கேயுரிய அதிகாரத் தோரணையில் ஒரு நாள் வகுப்பறையில் காந்த ஈர;ப்பு விசையைப் பற்றி பாடம் நடத்த ஆயிஷாவிற்கு அவற்றைப் பற்றி பல சந்தேகங்கள் வர ஆசிரியரிடம் கேள்விகள் கேட்க ஆரம்பிக்கிறாள்.

எரிச்சலடைந்த ஆசிரியர் அவளைக் கேள்வி கேட்காமல் தவிர்க்க நினைக்கிறார். பிறகு தன்னுடைய அதிகாரத் தோரணையில் ஏதோ மனநிறைவில்லாத ஒரு பதிலைக்கூறி வகுப்பறையை விட்டு வெளியே வர முயல்கிறார். அப்பதிலில் நிறைவடையாத ஆயிஷா கேள்விக்கணைகளை ஆசிரியரின் பின் சென்று மீண்டும் தொடுக்கிறாள்.

அப்போது தான் அவ்வாசிரியருக்கும் புரிந்தது. ஆயிஷா சாதாரண குழந்தையல்ல, பேரறிவாளி என்பது. புத்தாண்டுகளாகப் படித்துத் தான் பட்டம்பெற்ற அறிவியல் துறையில், இம்மாதிரியான அறிவார்த்தமான ஒரு கேள்வியும் தனக்கு ஏன் எழவே இல்லை என்று யோசிக்க ஆரம்பித்தார்.

"ஆயிஷா" தனக்குத்தானே வினாக்களை எழுப்பிக் கொண்டு அதற்கான விடையைத் தேடி நூலகத்திற்கு செல்வதும், பல விஞ்ஞானிகளின் நூல்களில் தனக்கான பதிலைத் தேடிக் கண்டடைவதிலும், ஆர்வம் காட்டினாள். அவ்வப்போது வரும் ஐயங்களுக்கு ஆசிரியர்களிடம் சென்று விடைக்கான முற்பட்டாலும் ஆனால் அவளுக்கு கிடைத்த கேள்விக்கான பரிசு, அவமானங்களும், அடிகளும் மட்டுமே. குழந்தைகளை வழி நடத்தும் ஒருவர் அவருடைய வாழ்க்கையைப்புத்திசாலித்தனமாக நடத்தக் கூடியவராகவும் சந்தர்ப்பம் ஏற்படும் போது வாழ்க்கையின் நடைமுறைகளைப் பற்றியும், வேலைகளைப் பற்றியும் விளக்கக் கூடியவராகவும் இருக்க வேண்டும். அது செய்திகளை மாணவர்களின் மூளையில் திணிக்கும் கல்வியாயிராது. மாறாக அவர்களுக்கு அறிவு தாகத்தை உண்டாக்கும் கல்வியாயிருக்கும். ஆசிரியர் - மாணவர் இருவரும் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்வதன் மூலமே கற்கின்றனர். பள்ளிக் கூடங்கள்,

பலிக்கூடங்கள் ஆகிவிட்டன. பள்ளிகளில் படிக்கும் பாடத்திட்டங்களுக்கு, முன்பே தயாரிக்கப்பட்ட நோட்ஸ்களில் நம் இளைய தலைமுறை நுழைந்து அறிவைப் புதைத்துக் கொள்கிறது.

எல்லா மாணவர்களுக்கும் எண்கள் தரப்பட்டுள்ளன. வகுப்பு, வரிசை எண், தேர;வு எண், பெற்றெடுக்கும் மதிப்பெண்கள் எங்கும் எண்களே பள்ளிகளை ஆள்கின்றன. எல்லா ஆசிரியர்களுமே ஏதாவது ஒரு வகையில் மாணவரின் அறிவை அவமானப்படுத்துகிறார்கள், என்பதைக் கண்டேன். என்று ஆயிஷாவில் அந்த அறிவியல் ஆசிரியர் பிறகு தன் தவறை உணர்ந்து அவளை மகளாகவே நினைத்துப் பக்குவப்பட்டவர்களாக மாறுவதை காண முடிகிறது. எனவே குழந்தைகளுக்கான அறிவைத் தேடும் திறவு கோலை அவர்களிடமே அளித்துவிட வேண்டும். அவர்களே அனைத்தையும் உணர்ந்து கற்க வேண்டும்.

**“ஆயிஷா” – மாணவர்களின் விடிவெள்ளி**

இக்கதையில் வரும் “ஆயிஷா” சுயம்தேடும் அறிவு ஜீவியாகவே படைக்கப்பட்டுள்ளாள். தானே தன்னுடைய கேள்விகளுக்கு விடை காண முற்படுகிறாள். இயலாநிலையில் நூலகம் செல்கிறாள். பலரோடு இயல்பாகப் பழகி, ஆசிரியரிடம் விடை காண நினைக்கிறாள்.

மாணவர்கள் தங்களின் சிந்தனைகளை எப்போதும் அடக்க நினையாதவர்கள். சிறகடித்து அறிவுலுகில் பறக்க நினைப்பவர்கள். அவர்கள் தாம் காணும் ஒவ்வொரு சூழ்நிலையிலும் பொருட்களிலும் உண்மையைத் தேடி ஆராயும் மனம் கொண்டவர்கள். அதில் கிடைக்கும் விடை தான் அவர்களின் தூய்மையான அறிவு. ஆயிஷாவும் அப்படித்தான்.

இந்த நவீன உலகில் மாணவர்களின் உரிமை இழக்கப்படும் அபாயமுள்ளதென நான் அவர்களை எச்சரிக்க விரும்புகிறேன். கட்டுப்பாடு என்னும் பெயரில் அனைத்து மாணவர்களின் மனங்களையும் காட்டாயப்படுத்தி ஒரே அச்சில் வார்ப்பதற்கான முயற்சி நடைபெறுகிறது. கட்டுப்பாடு என்னும் பெயரில் நாம் யந்திரத்தனமான ஒருமைப்பாட்டைத் திணிக்க முயல்கிறோம். இது மாணவர்களின் மனதைப் புண்படுத்தும் செயலாகும். இக்கருத்திற்கேற்பவே ஆயிஷாவும் ஒவ்வொரு பாடத்திலும் பள்ளியில் ஆசிரியரிடம் கேள்வியெழுப்பும் போது, அவர்களால் வெறுக்கப்பட்டு வன்முறைக்குள்ளாகிறாள். பிறகு தனக்குப் பிடித்தமான அறிவியல் ஆசிரியையிடம் அனைத்துமே பகிர்ந்துக் கொள்கிறாள். ஒருநாள் வகுப்பறையில் நைட்ரஸ் ஆக்ஸைடு தண்ணீரில் கரையுமா? மிஸ்- “ஆயிஷா”.

ஆம். தண்ணீரில் மட்டுமல்ல. எத்தனாலிலும் சல்பிரிக் அமிலத்திலும் கூடக் கரையும். இதைக் கேட்டவுடன் அவளுக்கு மகிழ்ச்சி. பரிசோதிக்கும் அறிவு கொண்டது. அவளின் ஆய்வு மனம். உடனே ஆராய்ச்சி செய்து பார்க்கும் ஆர்வம் வந்தது. மறுநாள் குழந்தைகள் தினவிழாவிற்காக பள்ளியில் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. நிகழ்ச்சிக்கு மாவட்ட அலுவலர் வருவதாக ஏற்பாடு. அச்சமயத்தில் “ஆயிஷா”.

ஆசிரியர் பதற்றத்துடன் என்னவாயிற்று எனக் கேட்க அவளின் முன்னால் இருந்த வாளியின் நீரில் தவளை மிதப்பதைக் காட்டினாள். ஆயிஷா இன்னிக்கு ….எக்ஸ்பரிமண்ட் சக்சஸ் மிஸ் என்ன …. என்ன எக்ஸ்பரிமெண்ட்.

இந்தாங்க ஸ்கேல்….. என்னை அடியுங்க பார்ப்போம்.

ஏன் “ஆயிஷா” என்ன சொல்றெ நீ

மருந்து மிஸ்….. மரத்துப் போற மருந்து … இனிமே யாரு அடிச்சாலும் எனக்கு வலிக்காது மிஸ்…. எப்படி வேணும்னாலும் அடிச்சிக்கட்டும்.

“ஆயிஷா” உனக்கென்ன பைத்தியமா

லேபிலிருந்து நைட்ரஸ் எத்தனால் கரைசல் கெடச்சதும் முதல்ல இந்தத் தவளைக்கு ஊசி போட்டேன். இரண்டு மணி நேரம் மல்லாக்கப் போட்டாலும் உணர்ச்சி இல்ல…. அப்போ மரத்துப் போச்சினு அர்த்தம்.

……..

அப்புறம் அதே மருந்தை எனக்கு ஊசி போட்டுக்கிட்டேன். எப்படி ஐடியா…..

ஆயிஷா…. நோ

என்று கதறினார் ஆசிரியர், அடுத்த நிமிடம்

''ஆயிஷா'' பிணமாக சரிந்தாள்.

எத்தனையோ குழந்தைகள் ஆசிரியரின் அன்பானக் கண்டிப்பு என்ற பெயரில் வன்முறையைத் தாங்குபவர்களாக இருக்கின்றனர். இதனால் மன உளைச்சல் மட்டுமல்ல. அவர்களின் சிந்திக்கும் அறிவும் முடக்கப்படுவதே உண்மை. ஆயிஷாவின் உயிரை ஆசிரியரின அதிகாரம் பலிவாங்கிவிட்டது. இப்படிப்பட்ட சூழ்நிலை இனி கல்வித்தளங்களில் எவ்விடத்திலும் நிகழவே கூடாது. அதற்கான உயிர் சாட்சியமாக ஆயிஷாவே இருக்கிறாள்.

தரம் ஒழுக்கம் என்ற அதிகாரப் பேச்சுக்கு மாற்றான குழந்தைகளின் சுதந்திரம் குழந்தைகளின் கற்பனைத்திறன் என்ற இசைக்குரல் லியோ டால்ஸ்டாயிடம் இருந்து கேட்டது. மாணவர;களுக்குக் கற்பித்தல் என்ற கர்வமொழியை மறுத்து, மாணவர்களோடு உரையாடல் (….) என்ற அன்பு மொழியை முதல் முறையாக அறிமுகப்படுத்தினார்.

டால்ஸ்டாய் அவர், கல்வியின் அடித்தளம், அனுபவம் என்றார். கற்பதற்கான வழி. சுதந்திரம் என்றார். குழந்தைகளின் நூறு - மொழிகள். எனவே, குழந்தைகளை சுதந்திரமாகக் கற்க விடுவதே ஆசிரியர், பெற்றோர், சமூகத்தின் கடமையாக இருக்க வேண்டும்.

**கல்வி குறித்த மாற்றுச் சிந்தனை**

கல்வி- மாணவர்களின் முதுகில் ஏற்றப்படும் சுமையல்ல என்பதை அனைவரும் அறிய வேண்டும். கல்விக்கூடங்கள் குழந்தைகளின் சிறைச்சாலைகளாக செயல்படாமல் அவர்களின் உளநிலைக்கேற்ப மகிழ்ச்சியான சூழல் உடையதாய் அமையவேண்டும். குழந்தைகள் விரும்பக்கூடிய விளையாட்டிற்கு முக்கியதுவம் கொடுக்கப்பட வேண்டும். அவர் விரும்பும் துறைகளை கற்க அனுமதிக்க வேண்டும். கற்றல் பள்ளியில் மட்டும் நிகழக்கூடியதல்ல. சமூக வெளிகளிலும் நிகழக்கூடியது என்பதையுணர்ந்து மாணவர்களின் சுய ஆற்றலை வளர்த்தெடுக்க வேண்டியது ஒவ்வொரு தனி மனிதரின் கடமை.

இதையே ''ஆயிஷா'' கதை வலியுறுத்துகிறது. கல்வி கற்பித்தல் என்பதல்ல. அறிவுக் கண்களைத் திறக்கும் சேவை.

**துணை நூல்கள்**

1. வினோபா, கல்வியில் வேண்டும் புரட்சி
2. வசந்தி தேவி. வே, கல்வி ஓர் அரசியல்
3. மாடசாமி. ச, குழந்தைகளின் நூறு மொழிகள்
4. மாலதி ஏ கல்வி, வகுப்புவாதம் எதிர்காலம், இந்திய மாணவர் சங்கம்